# புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட குண்டு வீச்சு விமானத்தின் மேலும் சில சிதைவுகள் பண்ணைக் கடலில் மீட்கப்பட்டன

கடந்த செப்டம்பர் மாதம் 13-ம் திகதி விடுதலைப்புலிகளினால் பண்ணைக் கடலுக்குள் சுட்டு வீழ்த்தப்பட்ட ஸ்ரீலங்கா விமானப் படையின் சிறிய மாசெற்றி குண்டு வீச்சு விமானத்தின் மேலும் சில சிதைவுகளும், அந்தவிமானத்தில் பொருத்தப்பட்டிருந்த றொக்கட் மோட்டார் ஒன்றும் கடற் புலிகளினால் நேற்று முன்தினம் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

இக் குண்டுவீச்சு விமானத்தின் விமானியின் ஆசனமும், விமானத்தின் இரு சக்கரங்கள், இயந்திரப்பகுதி, ஒரே நேரத்தில் ஏழுகுண்டுகளை வீசக்கூடிய றொக்கட் மோட்டார் ஒன்றும், மற்றும் விமானச்சிறகு ஆகியவையே தற்போது மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சியா மாசெற்றி ஒற்றை என்ஜின் குண்டுவீச்சு விமானத்தின் சில சிதைவுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புலிகளால் மீட்டெடுக்கப்பட்டு முத்திரைச்சந்தியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கோட்டையை மீட்பதற்சாக கடந்த செப்டம்பர் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பரேஷன் போர்ட் ராணுவ நடவடிக்கையின்போது குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்த மேற்படி விமானம் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டமை தெரிந்ததே. இவ்விமானத்தை மீட்க கடற்படையினர் சிறுத்தீவு கடற்பகுதியில் பலதடவை முயற்சி மேற்கொண்டுவந்தமையும் குறிப்பிடத்தக்கது. (74)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 25 பிரமோதூத மார்கழி 07 (22-12-1990) சனி

## றோகண விஜேவீராவின் சகா மீது கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்கு

ஜே. வி பி. தலைவர் றோகணவிஜேவீராவின் நெருங்கிய சகாவான சந்திரசிறி பெரேரா மீது பொலிஸாரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. றோகண விஜேவீர மூன்று வருடமாக தங்கியிருந்த அப்புத்தளை வீட்டை வாங்கியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. விஜேவீராவுக்கு புகலிடம் அளித்தமை, விஜேவீர, உபதிஸ்ஸ கமநாயக்க, சோவின்ச சுமித் அத்துகோரளை ஆகியோருக்கு நெருக்கமானவராக இருந்தும் அவர்களின் மறைவிடங்கள் பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கத்தவறியமை என்பனவே இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களாகும். 1982இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜே. வி. பி. தோல்வியடைந்ததையடுத்து அதன் அரசியல் பீடம் 1983 இல் கூடி தேர்தலுக்கு ஒரு மாற்று வழி பற்றி ஆலோசித்ததாம். சந்தேக நபர் றோகண விஜேவீராவோடு அகலவத்தைக்குப்போய் ஜே. வி. பி. முக்கியஸ்தர்களைச் சந்தித்து மூன்று நாட்களாக சதியாலோசனை செய்தார்களாம். அச்சந்தர்ப்பத்தில் —4-ம் பக்கம் பார்க்க

### மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின்

# காடுகளில்தஞ்சம்புகுந்திருந்தமக்கள் முகாம்களுக்கு திரும்பும் நிலை

## மருத்துவ வசதியின்றி 291 பேர் மரணம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் காடுகளில் மறைந்து வாழ நேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தொடர்ந்து பெய்யும் கடும் மழையினால் அங்கு இருக்க முடியாமல் மீண்டும் அகதி முகாம்களுக்கு திரும்புகின்றனர்.

ஆரம்பத்தில் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்திருந்த இம்மக்கள் முஸ்லிம் ஊர் காவல் படையாலும், காடையர்களாலும் இராணுவத்தாலும் 'காணாமல்' போகும் சம்பவங்கள் அதிகரிக்கவே காடுகளுக்கு தப்பியோடினர்.

தொடர்ந்து இயற்கையின் தயவிலேயே வாழ நேர்ந்ததால், வெள்ளம், தொற்று — 4ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் ஷெல் வீச்சு 200 குடும்பங்கள் இடம் பெயர்வு

### மாங்குளம் தாக்குதல்

## வீரவேங்கை போர்க்கின் உருவப்படங்கள் அலங்கரிப்பு

மாங்குள இராணுவ முகாம் தாக்குதலில் முக்கிய பங்கேற்று வீரகாவியம் படைத்த கரும்புலி லெப். கேணல் போர்க்கின் உருவப் படங்களை யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

இன்று கரும்புலி லெப். கேணல் போர்க்கின் நினைவு நாளாகவும், மாங்குள இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி விழாவாகவும் விடுதலைப் புலிகள் பிரகடனப் — 4 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அமைச்சர் சுக்ளா அடுத்த மாதம் வருவார்

இந்திய வெளியுறவு அமைச் ... தலைவர்களுடன் இலங்கை,

## திங்கள் முதல் பஸ் சேவை

யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்களின் நன்மை கருதி எதிர்வரும் திங்கள் முதல் பருத்தித்துறை, சாவகச்சேரி பகுதியிலிருந்து விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து காலை 7 மணிக்கும், மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து காலை 7 மணியளவிலும் பஸ்கள் புறப்பட ஏற்பாடாகியுள்ளது.

## கம்யூனிஸ்ட் செயலர் பொலிஸாரால் தாக்கு

மனித உரிமைகள் மீறல் விலைவாசி உயர்வு என்பற்றை கண்டித்து கண்டியில் இடம் பெற்ற சாத்வீக போராட்டத்தை பொலிஸார் முறியடித்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கை பி.சில்வா, ராஜா கொள்ளுரே ஆகியோர் பொலி

## காரைநகரில் ஷெல் வீச்சு
## 200 குடும்பங்கள் இடம் பெயர்வு

காரைநகர் கோவளம் பகுதியை நோக்கி நேற்றுப் பகல் கடற்படை முகாமிலிருந்தும், கடற்பகுதியில் இருந்தும் ஆட்லறி ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ச்சியாக பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன.

நான்கு நிமிடத்திற்கு ஒரு தடவை இத்தாக்குதல் நடாத்தப்பட்டது, இதனால் சில வீடுகள் சேதமுற்றன. பல மரங்கள் முறிந்து வீழ்ந்தன. இதனையடுத்து கோவளம், நட்டுப்பாளி, மூக்கம் பிட்டி ஆகிய பகுதியில் உள்ள 200 குடும்பங்கள் அச்சம் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறி அயற்கிராமங்களுக்குச் சென்றுள்ளனர். ப 3

## கோவளம் கடலில் இருந்து பீரங்கிப்படகு தாக்குதல்

காரைநகர் வெளிச்சவீட்டு முனையிலிருந்து மூன்று மைல் தொலைவில் ரோநது சென்று கொண்டிருந்த கடற்படைக் கப்பலொன்று துப்பாக்கிப்பிரயோகத்தையும், பீரங்கித்தாக்குதலையும்மேற்கொண்டது.

நேற்று இரவு கோவளம் பகுதியில் மக்கள் குடியிருப்பு மீது மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதலில் ஐந்திற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததுடன் எஸ்.பாலசுப் பிரமணியம் என்பவரின் வீடு பலத்த சேதமடைந்தது. இதே சமயம் அங்கு உறங்கிக்கொண்டிருந்த பி.பாலமுரளி (வயது (12)• வி பாலவினோதினி(வயது 9) ஆகியோர் காயமடைந்தனர்
(ப 31)

ஒப்பரேஷன் 'பிளஷ் அவுட்'

## படுவான் கரையில் குண்டுவீச்சு

மட்டக்களப்பு மாவட்டம் படுவான் கரைப்பகுதியில் கடும் விமானத் தாக்குதல் பரவலாக நடைபெற்றுவருகிறது. கடலில் இருந்து தரைப் பகுதியை நோக்கி கடும் பீரங்கித்தாக்குதலும் நடைபெற்று வருகிறது.

மட்டக்களப்பில் தற்போது

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அமைச்சர் சுக்ளா அடுத்த மாதம் வருவார்

இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளா ஜனவரி மாதம் 29 - ம் திகதி கொழும்பு வருகிறார்.

3 நாள் விஜயத்தின் போது அமைச்சர் சுக்ளா ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் முக்கிய தலைவர்களுடன் இலங்கை, இந்தியாவின் தற்போதைய

— 4ஆம் பக்கம் பார்க்க

பாராளுமன்றத்தில் நவரட்ணம் எம். பி

## யாழ் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கவும்

யாழ்ப்பாணத்துக்கு கடந்த நான்கு மாதங்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது இதனால் அங்கு விவசாயம் மற்றும் சகல தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கூட்டணி எம். பி திரு. கே. நவரட்ணம் பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், மின்சாரத்தின் உதவியுடன் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்வதாக அரசு கருதுகிறது. ஆனால் மாங்குளத்தில் மின்சாரம் இன்றி புலிகள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் அரச அதிபர் இன்று கொழும்பு பயணமாகிறார்

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் இன்று கொழும்பு பயணமாகிறார். பல அத்தியாவசிய விடயங்கள் தொடர்பாக கொழும்பில் உயர் அதிகாரிகளை அவர் சந்தித்து பேசவுள்ளார்.

தற்போதுள்ள நிவாரண உணவு விநியோகம் மற்றும் உணவுக் கப்பல்களை வடபகுதிக்கு துரிதமாக அனுப்பி வைப்பது போன்றவை குறித்

— 4 ஆம் பக்கம் பார்க்க

டத்தை பொலிஸார் முறியடித்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கே.பி.சில்வா, ராஜா கொல்லுரே ஆகியோர் பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.

## மாநில அரசுகளுக்கு மீண்டும் இந்தியப் பிரதமர் எச்சரிக்கை

மாநிலங்களின் விடயத்தில் மத்திய அரசு தலையிடமாட்டாது எனினும் தேவைப்பட்டால் கடும் நடவடிக்கையை மாநில அரசுகளுக்கு எதிராக எடுக்கவும் மததிய அரசு தயங்காது என இந்தியப் பிரதமர் எச்சரித்துள்ளார்.

கல்கத்தாவில் உரையாற்றிய பிரதமர், மாநில அரசுகள் மத்திய அரசிற்கு எச்சரிக்கை விடுக்கும் காலம் முடிந்து விட்டது எனக் குறிப்பிட்டார்.

## மாங்குளம் வெற்றி நாள் இன்று நிகழ்ச்சிகள்

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த லெப். கேணல் போர்க் உட்பட 62 வீரவேங்கைளின் 'நினைவாக இன்று மாபெரும் பொதுக் கூட்டமும், வெற்றி நாளு மாகக் கொண்டாடப்படவுள்ளது

வலிகாமம் பிரிவில் மாலை 4 மணிக்கு நல்லூர் கநத சுவாமி கோவில் வடக்கு வீதியிலும், தென்மராட்சிப் பிரிவில் மாலை 5 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், தீவகம் பிரிவில் மாலை 7 மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும், வடமராட்சிப் பிரிவில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் உரையாற்றவுள்ளனர்.

— 4ஆம் பக்கம் பார்க்க

# 6 மாத இராணுவ நடவடிக்கையில்

## 300 பேர் தமது அவயவங்களை இழந்தனர்

கடந்த ஜூன்மாதம் போர் ஆரம்பித்ததற்குப்பின் வடக்குகிழக்குப்பகுதிகளில் சுமார் 300 பேருக்கு மேல் கை கால்களை இழந்தபோதும் இதுவரை 97 பேரே யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகத்தில் பதிவு செய்துள்ளதாக அந் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய செயற்கைக் கால்களைக் கொழும்பிலிருந்து அனுப்புவதில் தலைமையகம் அசட்டையீனமாக இருப்பதாகவும் இதனால் பழைய சேதமடைந்த செயற்கைக் கால்களை மீளத் திருத்தி தற்காலிகமாக நோயாளிகளுக்கு பொருத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 113 செயற்கைப் பாதங்களுக்கு கடந்த ஜூலையில் விண்ணப்பம் செய்ததாகவும் இதுவரை 15 செயற்கைப்பாதங்களே யாழ்ப்பாணத்திற்கு தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கவீனமடைந்துள்ள அனைவரும் பதிவு செய்தால் அப் புள்ளி விபரங்களைக்கொண்டு புதிய அவயவங்களை அனுப்புமாறு தலைமையகத்தை வற்புறுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.(70)

## முழுநேரக் கல்விப் பட்டப்பின் படிப்பை தொழில்புரிவோர் சம்பளத்துடன் பயில அனுமதி

தொழில் புரிபவர்கள் பல்கலைக் கழகங்களில் முழு நேரக் கல்விப் பட்டப்பின் படிப்பை முழுச் சம்பளத்துடன் மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது

முன்னர் தொழில் புரிபவர்கள் முழுநேரக் கல்விப்பட்டப்பின் படிப்பு நெறிக்கு அனுமதி பெறுவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இவர்கள் பகுதிநேரப்பயிற்சி நெறிகளையே பயில்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தொழில் புரிபவர்கள் முழு நேரப் படிப்பைத் தொடர்வதாயின் அவர்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெறல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை 1991-ம் கல்வியாண்டுக்கு கல்விப் பட்டப்பின் படிப்புக்கு பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்தமாதம் கொழும்பில் இப்பரீட்சையை வைப்பதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

75 பட்டதாரிகள் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்பின் படிப்பைத் தொடருவர். (74)

## மாலைதீவில் சிறைவைக்கப்பட்ட 33 புளட் இயக்கத்தினர் விடுதலை!

மாலைதீவில் ஆயுட்தண்டனையை அனுபவித்துவந்த புளட் இயக்கத்தைச்சேர்ந்த 33 பேர் மாலைதீவு அரசினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் விடுதலை செய்யபபட்ட இவர்கள உடனடியாகவே பலத்த பாதுகாப்புடன் விமானத்தில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப் படடனர்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் சிபார்சின் பேரிலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1988ம் ஆண்டு மாலைதீவில் ஜனாதிபதி ஆட்சியைக் கவிழ்க்கும் சதிப் புரட்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட 68 புளட் இயக்கத்தினருக்கு ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இவர்களில் 33பேரே நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

## புங்குடுதீவில் புத்தூக்க வகுப்பு

க. பொ. த. சாதாரண பரீட்சை எடுக்கவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இலவச புத்தூக்க வகுப்புக்கள் நடைபெற்றுவருகிறன.

பாடசாலை முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு நாளும் மாலை மூன்று மணியிலிருந்து ஐந்து மணி வரை இந்த வகுப்புக்கள் நடைபெறுகிறது.

இந்த இலவச வகுப்புக்களில் முக்கிய பாடங்களான கணிதம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம், சமயம் போன்றவை போதிக்கப் படுகின்றன. (20)

## முதலுதவிப் பரீட்சை

சர்வதேச சென் ஜோன் அம்புலன்சின் இலங்கைக் கிளையினால் நடாத்தப்படும் பரீட்சை - நல்லூர்ப் படை அத்தியட்சகர் பிரிவுகளுக்கு எதிர்வரும் 24-ம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

நல்லூர் மத்திய பிரிவு, கொக்குவில் மத்திய பிரிவு, தாவடி மத்திய பிரிவு, கொக்குவில் மேஜாா் பிரிவிலுள்ள சகல முதலுதவிப் பரீடசார்த்திகளைப் பரீட்சைக்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு படை அத்தியட்சகர்கள் கேட்டுள்ளனர். (71-ப)

## குருத்துவ வைர விழா



விதைநெல், உரம் இன்மையால்

# கால போக நெற்செய்கை பெருமளவில் பாதிப்பு!

யாழ் மாவட்டத்தில் 1990-91ம் ஆண்டுகால போகத்திற்கான நெற்செய்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயப்பகுதி மதிப்பிட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில்12543 ஹெக்டெயர் நெற்செய்கைக்குகந்த நிலம் உள்ளது இவற்றில் இயற்கை அழிவுகளினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்து ஆகக்குறைந்தது 8840 ஹெக்டெயரில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் இதன் மூலம் 16,866 மெற்றிக்தொன் நெல் உற்பத்தியைப் பெறமுடியுமெனவும் முன்னர் மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாகவும், விதைநெல், கிருமிநாசினி, உரம் என்பவற்றை விவசாயிகள் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாகவும் கால போக நெற்செய்கை மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயப்பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ் மாவட்டத்திற்கு கால போக நெற் செய்கைக்கென சுமார் 7000 மெற்றிக் தொன் உரத்தினை கமநலச் சேவைத் திணைக்களம் விவசாயிகளுக்கு வழங்கி வருவது வழமை. ஆனால் இவ் வருடம் உரத்தை எடுத்து வருவதற்கு தடை விதிக்கப் பட்டதினால் விவசாயிகளுக்கு எந்தவித உரத்தையும் தருவித்து வழங்க முடியாது போய்விட்டதாக மேற்படி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் அடுத்த சில மாதங்களில் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள காலபோக நெல் அறுவடையில் சடுதியான வீழ்ச்சியொன்று ஏற்படும் என எதிர் பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ப.11)

## ஓய்வுபெற பலர் விருப்பம்

கிளிநொச்சி கல்விப் பிராந்தியத்தில் சுயவிருப்பில் ஓய்வு பெற இதுவரை 14 ஆசிரியர்களும், 2 கல்வித்திணைக்கள எழுதுநர்களும், ஒரு கல்வித் திணைக்கள சிற்றூழியரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருப்பதாக நிதி உதவியாளர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் தெரிவித்தார்.

இவர்களுக்கு இச்சுற்று நிருபத்தின்படி ஆறுமாதச் சம்பளம் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (ப-17)

## யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

அண்மையில் இடம்பெற்ற யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- கலாநிதி சி. சு.சிற்றம்பலம், துணைத்தலைவர்.- கலாநிதி கே.கந்தசாமி, செயலாளர்:- இரா. சிவசந்திரன், துணைச்செயலாளர்:- திருமதி நா. செல்வநாயகம், பொருளாளர்;- ஜெயராமன்.

இவர்களுடன் ஆறுபேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டத்தில் தென் தமிழீழ மக்களின் துயர்துடைப்பு நிதிக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்குவர் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## விதை உருளைக் கிழங்கு வடக்கிற்கு தருவிக்கத் தடை!

யாழ் மாவட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கையை இவ்வருடம் மேற்கொள்வதற்குத் தேவையான, விதை உருளைக் கிழங்குகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வழங்குவதற்கு விவசாய அமைச்சு மறுத்துவிட்டதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது

இதனால் 1500 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு உற்பத்தியைத் தரக்கூடிய விவசாய நிலங்கள் செய்கையின்றி தரிசாகக் காட்சியளிக்கின்றன. அடுத்த ஆண்டு உருளைக் கிழங்கிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை இதனால் உருவாகும் என விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன, (ப-11)

## உணவுப்பொருள் தேக்கல் வரி அறவிடுவது நிறுத்தப்படும்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தினால் விபயோகிக்கப்பட்டுவந்த உணவுப் பொருட்களுக்கான ஒரு சதவீத தேக்குதல் வரியை பல. நோ. கூ. சங்கங்களிடமிருந்து அறவிடுவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1990-ஆம் ஆண்டு வைகாசி 3ஆம் திகதிக்குப் பின்னர் இந்த வரியினைச் செலுத்திய யாழ் மாவட்டத்திலுள்ள பல. நோ. கூ. சங்கங்கள் இக் கொடுப்பனவை மீளப் பெற்... கூ. மொ. வி. ஸ்தாபன நிதி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 RD, CROSS ST,
JAFFNA.



## அருட்திரு
## வில்லவரசிங்கம் அ. ம. தி (O. M. I)

இறைவனின் அழைப்பை ஏற்று 60 ஆண்டுகள் குருவாக சேவை புரிந்து 22 மார்கழி 1990 இல் குருத்துவ வைரவிழாவைக் கொண்டாடும் இவர், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அமலமரித் தியாகிகள் சபையின் முதிர்ந்த உறுப்பினருமாவார். பல கடினமான பங்குகளில் நீண்டகால பணியாற்றி பலரதும் நல்வாழ்வுக்காக உழைத்த ஒரு தொண்டர். உதட்டில் கண்டிப்பும், உள்ளத்தில் கருணையும் கொண்டு வழி நடத்தும் ஒரு சிறந்த நிர்வாகி. செபமாலைத்தாசர் ஆச்சிரமத்திலும், மருதமடுத்திருப்பதியிலும், யாழ் மறைமாவட்ட திருமண நீதிமன்றத்திலும் இவர் ஆற்றிய சிறந்த சேவை குறிப்பிடத்தக்கது.

தற்போது கொழும்புத்துறை மத்தியூஸ் இல்லத்தில் ஒய்வு பெற்றிருக்கும் இவரது வயது 86. பழுத்த பருவத்திலும் இளமை உள்ளமும், பொறுமை உணர்வும், தெய்வ பக்தியும் இவரது ஆளுமையின் சிறப்புக்களாகும். இவர் நீடிய ஆயுளும், நற்சுகமும் பெற்று, நற்பணிகள் தொடர இறைவன் இவருக்கு சகல அருட்கொடைகளையும் வழங்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

விக்ரர் யோசப் குடும்பத்தினர்

12141

நல்லூர் மத்திய பிரிவு, கொக்குவில் மத்திய பிரிவு, தாவடி மத்திய பிரிவு, கொக்குவில் மேஜார் பிரிவிலுள்ள சகல முதலுதவிப் பரீடசார்த்திகளைப் பரீட்சைக்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு படை அத்தியட்சகர்கள் கேட்டுள்ளனர். (71-ப)

பட்டனர்.

கூட்டத்தில் தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிதிக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்குவர் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# மேலும் சில கல்லூரிகள் தேசிய பாடசாலைகளாகும்

மேலும் சில பாடசாலைகளுக்கு தேசிய பாடசாலைகள் அந்தஸ்தை வழங்க உயர் கல்வி அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளது.

2000க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள, க. பொ. த. உயர்தர விஞ்ஞானப்பிரிவில் 200 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையொன்றே தேசிய பாடசாலையாக்கத் தகுதியுடையது

அத்துடன் தொடர்ந்து 3 வருடங்களாக உயர்தர வகுப்பு மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி குறிப்பிட்ட வீதத்திற்கு அதிகமாகவுள்ளதுடன் அப்பாடசாலை போதிய கட்டிட, தளபாட வசதிகளையும், தொழில் நுட்ப பாடங்களைப் போதிப்பதற்கான வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இவைதவிர சக்தி வாய்ந்த பாடசாலை அபிவிருத்திச் சபை, உயர்தர மாணவருக்கான ஆய்வுகூட வசதி, போதிய வச க்கட்டண வருமானம், திருப்தியான பழைய மாணவர் சங்கம் என்பவற்றையும் கொண்டுள்ள பாடசாலைகளை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்படும். (74)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12137


எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1990-ஆம் ஆண்டு வைகாசி 3ஆம் திகதிக்குப் பின்னர் இந்த வரியினைச் செலுத்திய யாழ் மாவட்டத்திலுள்ள பல. நோ. கூ. சங்கங்கள் இக்கொடுப்பனவை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என


CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 RD, CROSS ST,
JAFFNA.


## யாழ்ப்பாண மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக் கடைகள் 1991ஆம் ஆண்டு குத்தகை சம்பந்தமான அறிவித்தல்

07-12-90ஆம் திகதிய முரசொலிப் பத்திரிகையிலும் மாநகரசபையின் விளம்பரப் பலகையிலும் வெளியிடப்பட்ட மேற்படி விடயம் சம்பந்தமான கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி 27-12-90 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும், கேள்வி ஏற்றுக்கொள்ளபபடும் திகதி 28-12-90 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது ஏனைய நிபந்தனைகளில் எதுவித மாற்றமுமில்லை.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-12-1990.

12139

இன்று மாங்குளம் தகர்ப்பு வெற்றி நாள்

# மாங்குளத்தை தகர்த்தெறிந்த மாவீரன்

# கரும்புலி லெப். கேணல் போர்க்

14. 6. 1988

காலை நேரம், காட்டின் இருள் புலிகளின் அந்த முகாமைவிட்டு இன்னும் விலகவில்லை. இந்திய இராணுவத்தினர் அக் காட்டிற்குள் இறங்கி விட்டார்கள் என்ற செய்தி கிடைக்கிறது.

இராணுவத்தினர் அந்த முகாமை நெருங்குவதற்கு அவர்களை வழிமறித்துத் தாக்குவது எனப் புலிகள் திட்டமிட்டனர். தொடர்ந்து புலிவீரர்கள் அணிவகுத்தார்கள். இராணுவத்தினரின் பாதையில் அவர்கள் காத்திருந்தார்கள். திட்டமிட்டபடி தாக்குதலும் தொடங்கியது.......

இந்தியப் படையினருக்கு அந்தக் காடும் பாடம் படிப்பித்தது ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை எதிர்த்து அவர்கள் கொஞ்சப்பேர் கடுமையாகப் போரிட்டார்கள். பல படையினர் வீழ்ந்தனர். ஆனால் அத்தாக்குதலுக்குத் தலைமை வகித்தவர் காயமடைந்தார். பின்பு வாதவூரானும் - போர்க்கும் அத்தாக்குதலை வழிநடத்தினார்கள். சற்று நேரத்தில் இந்தியப் படையினரின் துப்பாக்கி ரவை ஒன்று வாதவூரானின் வயிற்றில் வந்து விழுந்தது. தொடர்ந்து போர்க் அத்தாக்குதலை வழிநடாத்தினான். நீண்ட நேரச் சண்டை, ஆனால் எதிரி வீசிய துப்பாக்கி ரவை ஒன்று போர்க்கின் காலையும் காயப்படுத்தியது.

அதன்பின் காயமடைந்த மூவரையும் தூக்கிக்கொண்டு ஏனைய போராளிகள் பின்வாங்கினார்கள். அதேநேரம் இந்திய உலங்கு வானூர்திகள் இராணுத்தினரை எங்கும் இறக்கிக் கொண்டிருந்தன.

போர்க்கைத் தூக்கிக்கொண்டு பத்துப் போராளிகள் நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் துப்பாக்கி ரவைகள் குறைந்து விட்டன. ஆனால் இராணுவத்தினர் மீண்டும். மீண்டும் வழிமறித்தார்கள். இரவு வந்தது அவர்களால் ஒரு அங்குலம்கூட அசைய முடியவில்லை விடிந்தது. மீண்டும் நடந்தனர். அவர்களுக்கு உணவோ, தண்ணீரோ இருக்கவில்லை. களைத்திருந்தனர்.

அப்போது ஒரு தோழன் சொன்னான்.

''இராணுவத்தினர் மீண்டும் வந்து தாக்கினால் நாங்கள் எல்லோரும் குப்பியைக் கடிப்போம், போர்க் அண்ணையை விட்டுட்டு எங்களால் ஓடமுடியாது'' என்றான்.

போர்க் அவர்களைப் பார்த்தான். வேதனையினூடே அவனது வார்த்தைகள் வெளி வந்தன.

'நாங்கள் மனம் உடையக்கூடாது, இந்நேரத்தில்தான் உறுதியாக இருக்க வேண்டும். சாப்பாடு இல்லாமல் பசியோடு பல நாட்கள் காட்டிலிருந்து தப்பிவந்த பலர் எங்களிலும் உண்டு. நாங்கள் சோர்ந்து விடக்கூடாது. அப்படித்தான் இந்தியன் வந்தாலும் நீங்கள் தப்பிச் செல்லுங்கள். நாங்கள் அழியக்கூடாது. இனித்தான் இயக்கம் வளரவேண்டும். இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்ட வேண்டும். தமிழீழம் காணும்வரை நாம் தொடர்ந்து போராட வேண்டும்' என்று கூறினான். மரணம் அவனுக்கு அருகில் இருந்தது. அவன் சயனைட் குப்பியை அணைத்திருந்தான். அந்த நேரத்திலும் தன் தோழர்களும், போராட்டமும் அழிந்து விடக்கூடாதென்பதில் கவனமாக இருந்தான்.

அவர்கள் தொடர்ந்து பின் வாங்கினார்கள். சோர்ந்து விடும் பொழுதெல்லாம் அவர்களைப் போர்க் உற்சாகப் படுத்தினான். ஆனால் வாதவூரானை தூக்கிக் கொண்டு பின்வாங்கிய குழு மீண்டும் தாக்கப்பட்டது கப்டன் வாதவூரான் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

அந்தக் காட்டின் ஒரு கரையில் புலிகளின் புதிய பயிற்சி முகாம் ஆரம்பமாகியது. போர்க்கும் அங்கே வைத்தியம் செய்து கொண்டிருந்தான் ஊரெங்கும் இந்தியப் படைகளும், தேசவிரோதிகளும் நிறைந்து நின்றனர். அதற்கிடையேயும் இயக்கம் வளர்ந்தது. இந்தியர்கள் தோல்வி அடைந்தார்கள், தேசவிரோதிகள் அடித்து விரட்டப்பட்டார்கள். கையில் இந்தியர்களின் ஆயுதங்களுடன் இளம் புலிகள் நிமிர்ந்து நின்றார்கள்.

★ ★

ஆறுமுகத்தான் புதுக்குளம் என்னும் சிறு கிராமத்தைச் சேர்ந்தவன் தான் போர்க். அது ஒரு அழகான சின்னக் கிராமம், அங்கொன்றும், இங்கொன்றுமாக சில வீடுகள் காணப்பட்டன. கிராமத்தைத் தொடர்ந்து வயல், வெளிகள் அதற்கு அப்பால் அடர்ந்த காடு அந்த வயல் வெளிகளில் தான் சிறுவயது தொடக்கம் போர்க்கும் வாழ்ந்தவன் குளத்தில் குளித்து, மரங்களுடன் பேசி, வயலில் காவலுக்கு நின்று, வளர்ந்தவன். கிராமத்தில் இருக்கும் பொழுது போர்க் கொஞ்சம் குளப்படிதான்.

ஆனால், இவர்களுக்கு அருகிலும் ஆபத்திருந்தது—சிங்கள எல்லையிலிருந்து குடிகள் பரவத் தொடங்கின மாமடு இரண்டாகி சிங்கள மாமடு உருவாகியது. தொடர்ந்து சேமமடுவும் இரண்டாகியது .....

தன் தாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என போர்க் உணர்ந்து கொண்டான். 1984இல் புலிகளுடன் இணைந்து போராடத் தொடங்கினான் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா—இந்தியப் படைகளுக்கெதிராகப் பல இடங்களில் கடுமையாகப் போரிட்டான்.

காலில் பட்ட காயம் குணமடைந்த சில நாட்களின் பின் போர்க் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். தன் தோழர்கள் மீது எவ்வளவு அன்பையும், பாசத்தையும் போர்க் வைத்திருந்தானோ அதேயளவு கடுமையாக போராளிகளின் ஒழுக்கத்திலும், கட்டுப்பாடுகளிலும் இருந்தான். தொடர்ந்து பல சண்டைகளை இந்தியப் படையினருக்கு எதிராக திட்டமிட்டு வழி நடாத்தினான்.

அதன் பின்பு வன்னி நடமாடும் அணியின் பொறுப்பாளனாக போர்க் நியமிக்கப்பட்டான்.

ஆனி 10-ந் திகதி தொடங்கிய சிங்களப் படைகளுடனான போரின் போது முதல் ஒரு முறை மாங்குளம் படைமுகாம் புலிகளால் தாக்கப்பட்டது ஆனால் அத்தாக்குதல் வெற்றியடையவில்லை புலிகள் பின்வாங்கி முற்றுகையிலீடுபட்டார்கள். போர்க் அந்த முற்றுகைக்கு சிறிது காலம் பொறுப்பாளனாக இருந்தான், பின் மீண்டும் வன்னி நடமாடும் அணிக்கு பொறுப்பாளனாக இருந்தான்.

ஒரு இராட்சதன் போல் மிகப் பலமாக இருந்த மாங்குளம் இராணுவ முகாம் மீது இரண்டாவது முறை தாக்குதலுடக்கு திட்டமிடப்பட்டது. போர்க் கரும்புலியாக வெடி மருந்து வண்டியை தானே ஓட்டிச் செல்வதென முடிவெடுத்தான்.

தாக்குதலின் இரண்டாவது நாள் புறப்படுவதற்கு தயாரான போர்க் தன் தோழர்களிடம் கூறினான் ''இயக்கத்தின் இந்த வளர்ச்சி எனக்குப் பெரிதும் திருப்தியாக இருக்கிறது. நீங்கள் மேலும் உறுதியாக இருக்க வேண்டும். நாங்கள் தமிழீழத்தை நிச்சயம் காண்போம்'' என்றான். அவனது தோழர்களின் கண்கள் கலங்கின முன் பொருமுறை காட்டின் நடுவே போர்க் சொன்னதை அவர்கள் நினைத்துக் கொண்டார்கள் ''நீங்கள் அழியக்கூடாது, இயக்கம் வளர வேண்டும் தமிழீழம் காணும் வரை தொடர்ந்து போராட வேண்டும்''

போர்க் புறப்படும் இறுதிக் கணம் ஒரு தோழன் மட்டும் போர்க்கின் அருகில் நின்றான் போர்க் மணிக்கூடு, பிஸ்டல், எல்லாவற்றையுமே கழற்றிக் கொடுத்தான். நட்சத்திரங்களின் ஒளிர்வில் அவர்களின் உருவங்கள் மட்டும் தெரிந்தன.

வெடிமருந்து வண்டி மாங்குளம் படைமுகாமினுள் ஓடத்தொடங்கியது. முகாமின் நடுப்பகுதியில் வெடித்துச் சிதறியது .... சிங்களப்படையினரின் முகாம் கட்டிடங்கள் சிதறின. முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. போர்க்கின் உயிரற்ற உடல் சற்றுத் தள்ளிக் கிடந்தது.

வன்னியின் எல்லா இடங்களிலும் அந்த மாவீரனுக்கு அஞ்சலி செய்ய மக்கள் திரண்டனர். அந்த மாவீரனின் முகத்திற்கு கண்ணீரால் அஞ்சலி செய்தனர்.

கார்த்திகை 27, மாவீரர் நாள், இரவு 12 மணி.

கடுமையான மழை தண்ணீருற்று லோறன்ஸ் பூங்காவில் சிலர் தீபங்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுத்துச் சென்ற எல்லா மாவீரர்களுக்கும் தீபங்கள் ஏற்றப்பட்டன. லோறன்ஸ், முரளி, பசிலன், மகேந்தி, பாலா, நவம். தங்கேஸ், தினேஸ் என ஒவ்வொரு தீபங்களாக எரிந்தன.

அதே நேரம், அந்தப் பூங்காவில்......, போர்க்கும் ஒரு தீபமாக எரிந்து கொண்டிருந்தான். அது அவன் உடல் எரிந்து முடியும் இறுதி நேரம்....., தன் வீரமகன் மீண்டும் இந்த மண்ணிலே பிறக்க வேண்டும் என தமிழீழத் தாய் வாழ்த்தி வழியனுப்பிக் கொண்டிருந்தாள்.

## வீர மரணமடைந்த வீர வேங்கைகளின் விபரம்

22-11-1990 அன்று மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்தவீரவேங்கைகளின் விபரம்:

கரும்புலி லெப். கேணல் போர்க் (மா. ... ரமணன் (யோ. ஜெயடணம்) பரந்தன், ரம்சீன் (ச. தமிழ்ச் செல்வன்) பூவரசன்குளம், லோறன்ஸ் (கோ. தவனேஸ்வரன்) புளியங்குளம், இம்ரான் (வே. குணதர்மன்) முத்தை

## இராணுவத்திடம் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரம்

மாங்குளம் தாக்குதலின் போது ஸ்ரீலங்கா இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதஙகளின் விபரம் வருமாறு:-

1. 50 கலிபர்-01, 50 கலிபர் மேலதிக சுடு குழல் - 01, 50 கலிபர் முக்காலி - 01, 50 கலிபர் ரவை - 1440

... குண்டுகள் - 10, 60. மி மீ. மோட்டார் இருகால் - 01, 60. மி. மீ. மோட்டார் போஸ்பிளேட் - 01

9. 2 அங்குல மோட்டார் - 05, 2 அங்குல ஷெல் - 430, 2 அங்குல வெளிச்சக்குண்டுகள் - 08.

## வீர வேங்கைகளின் விபரம்

22-11-1990 அன்று மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்தவீரவேங்கைகளின் விபரம்:

கரும்புலி லெப். கேணல் போர்க் (மா. அரசரத்தினம்) சேமமடு, மேஜர் திலீப் (அ. வக்னேஸ்வரன்) கனகராயன்குளம் மேஜர் பிரபா (தி. தேவகிருஷ்ணகுமார்) செட்டிகுளம், மேஜர்கரன் (ந. நல்லதம்பி) வவுனிக்குளம், கப்டன் ஜெகன் (சு சுரேஷ்குமார்) செம்மலை, கப்டன் வதனன் (த. ராஜேஸ்வரன்) குமுழமுனை, கப்டன் ரசாத் (சி சுரேஸ்குமார்) கணேசபுரம், கப்டன் எழில் (த செல்வராஜ்) உருத்திரபுரம், லெப். பாவி (து முத்துக்குமார்) நெடுங்கேணி, லெப். லிங்கம் (மு சோதிவேல், கிளிநொச்சி, லெப். வர்ணன் (இ இராசலிங்கம்) நட்டாங்கண்டல், லெப். கோபு (ம. கிரிஸ்றிகுமார்) கண்ணாட்டி, லெப். அருணா (சு. வில்வராஜ்) அளம்பில்.

2வது லெப். அன்பழகன் (ம. பாலகிருஷ்ணன்) ஒட்டுசுட்டான், 2-வது நிராஜ் லெப். (செ. சிவனேசச்செல்வன்)நெடுங்கேணி, 2-வது லெப டெனி (ந.உருத்திரமூர்த்தி) பன்குளம், 2-வது லெப். பிரதீப (அ ஆனந்தராஜ்)மணல்குடியிருப்பு.2-வதுலெப். அலன் (செ. கமலறோஜன்) உடப்பு, 2வது லெப். மகான் (பா. பாலவரதன்) தண்ணீரூற்று. 2-வது லெப். ரூபன் (குமாரவேல்) விஸ்வமடு, 2-வது லெப். குமரன் (பொ. சிவசக்தி) நெலுங்குளம், 2வது லெப். தும்பன் (து. பால்ராஜ்) சுழிபுரம், 2-வது லெப். ரஞ்சன் (தி. சேவியர் செல்வம்) பனங்கட்டிக்கொட்டு, 2-வது லெப். ஜஸ்டின் (யா. மானில்) கல்மடு. 2-வது லெப். நாதன் (சி. ரவீந்திரன், கிராஞ்சி.

லெப். டெனி (சி. குசனகுமார்) செட்டிகுளம், நியூட்டன் (கு. சுரேஷ்) வட்டக்கச்சி, ரமணன் (யோ. ஜெயடணம்) பரந்தன், ரம்சீன் (ச. தமிழ்ச் செல்வன்) பூவரசன்குளம், லோறன்ஸ் (கோ. தவனேஸ்வரன்) புளியங்குளம், இம்ரான் (வே. குணதர்மன்) முத்தையன்கட்டு, 2-வது லெப். ஜேக (மு. மகேந்திரன்)வட்டுக்கோட்டை, ரொபேட் (ச ஜெயசிங்கம்) முருங்கன்.

தனராஜ் (சி. ஆனந்தராஜ்) ஒட்டுசுட்டான், விசு (வே. குமார்) கிளிநொச்சி, லோகன் (இ புவனேந்திரன்) கிளிவெட்டி, டரன் (ச நவரத்தினம்) அளம்பில். அர்ச்சுனா (ம. ரவி) இரணைமடு, ஆனந்தராஜ் (நா.தம்பி

— 4 ஆம் பக்கம் பார்க்க



சிரித்த முகத்துடன் சாவை ஏற்று வெடி மருந்து வண்டியில் கரும் புலி

மாங்குளம் தாக்குதலின் போது ஸ்ரீலங்கா இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

1. 50 கலிபர்-01, 50 கலிபர் மேலதிக சுடுகுழல் - 01, 50 கலிபர் முக்காலி - 01, 50 கலிபர் ரவை - 1440
2. ஜி பி.எம் ஜி - 04 ஜி.பி எம் ஜி மேலதிக சுடுகுழல் - 02, ஜி பி. எம். ரவை (லிங் குடன் - 2400, ஜி பி. எம். லிங்- 4045
3. 303 எல். எம் ஜி. - 07, 303 எல் எம் ஜி. மேலதிக சுடுகுழல் - 09. 303 எல். எம் ஜி ரவைகள் - 4255,303 எல் எம். ஜி ரவைக் கூடுகள்- 46.
4. ஏ. கே,எல். எம். ஜி. - 11, ஏ.கே. எல். எம்.ஜி. ரவைக் கூடு - 30, ஏ. கே. எல் எம். ஜி, லிங்-4275.
5. ஆர். பி. ஜி. -07, ஆர் பி. ஜி. ஷெல்-64, ஆர்: பி. ஜி. புரொப்பெலர் - 66.
6, 40. மி. மீ. கிரனைட் பிஸ்டல் - 01, 40. மி. மீ. ஷெல் - 12
7. 81. மி மீ மோட்டார் - 6, 81 மி.மீ. ஷெல் - 42, 81. மி மீ பூஸ்ரல்-140
8. 60 மி மீ இநகாலி மோட்டார் - 06' 60 மி.மீ கொமாண்டோ மோட்டார்-02, 60.மி.மீ. ஷெல்-130, 60. மி. மீ.வெளிச்ச குண்டுகள் - 10, 60. மி மீ. மோட்டார் இருகாலி - 01, 60. மி. மீ. மோட்டார் போஸ்பிளேட் - 01
9. 2 அங்குல மோட்டார் - 05, 2 அங்குல ஷெல் - 430, 2 அங்குல வெளிச்சக்குண்டுகள் - 08.
10. ரி 56 சாதாரண வகைத்துப்பாக்கிகள்-14 ரி. 56-1 ரகதுப்பாக்கிகள் - 16, ரி. 56-2 ரகதுப்பாக்கிகள் - 30, ரி. 56 புதியவகைத் துப்பாக்கிகள் - 07, ரி. 56 ரவைக்கூடுகள் - 121
11. ரி 81 ரகதுப்பாக்கிகள்-30, ரி. 81ரவைக் கூடுகள் - 82, ரி. 81 ரைபிள் கிரனைட்-07
12. எம். 70 ரக துப்பாக்கிகள் - 03, எம். 70 ரவைக் கூடுகள் - 30.
13. 303 ரக துப்பாக்கிகள் - 03, 303ரவைக் கூடுகள் - 30.
14. ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகள் - 07.
15. வேட்டைத்துப்பாக்கி - 02
16. எவ். 3 லிங் - 6000, 82 மி மீ ஷெல்-26 82 மி மீ. காட்டிறிச் - 24, 82. மி மீ பியூஸ் - 24 82. மி மீ. பூஸ்ரர் - 72, எம் 4 (ஜே. ஆர். கைக்குண்டு) - 76, எம் - 73 கைக்குண்டுகள் - 214 ரி. என்; ரி கைக்குண்டுகள் - 79, புகைக்குண்டுகள் - 03, சாதாரண வெளிச்சக்குண்டுகள் - 02, கிளைமோர் - 09, வெடி அதிர்வு கடத்தி ரோல் - 01, மிதிவெடிகள் - 60. எச்சரிக்கை மிதிவெடிகள்-20, வெடி மருந்துப் பெட்டி - $2\frac{1}{2}$, கரி மருந்து கிலோகிராம் - 25, தொலைத்தொடர்பு சாதனங்கள் - 02, தலைக்கவசம் - 69, தண்ணீர்ப்போத்தல் - 13, சாப்பாட்டுப் பட்டி - 03, மழைக் கவசம் - 02, ரோதற்பை - 09. தொலைத்தொடர்பு சாதனக் கோல்சர் - 07, குண்டுதுளைக்

— 4 ஆம் பக்கம் பார்க்

யாழ். மாவட்டத்தில் உள்ள சில ப. நோ. கூ. சங்கங்களுக்கு

# போதியளவு பொருட்கள் கிடைக்காததால் விசேட நிவாரண விநியோகம் இடைநிறுத்தம்!

யாழ் மாவட்டத்திலுள்ள அநேக ப. நோ. கூ. சங்கங்களில் இரண்டாம் வாரத்திற்கான விசேட இலவச உலர் உணவுப் பங்கீட்டை வழங்க, போதியளவு உணவுப் பொருட்கள் இல்லாமையினால் இவ் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இம்மாதம் 9-ந் திகதி இவ்விநியோகம் ஆரம்பமாகியுள்ளது என யாழ் செயலகம் அறிவித்திருந்த போதும், இச்சங்கங்களுக்குத் தேவையான பொருட்களை உணவுக்கட்டுப்பாட்டு அலுவலகம் வழங்கவில்லை எனக் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை புனர்வாழ்வு, புனரமைப்புக் இலையினால் அகதிகள் முகாம்களுக்கென நான்கு வாரங்களுக்கான உணவுப் பொருட்களை ப. நோ. கூ. சங்கங்கள் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென அறிக்கை விடப்பட்டபோதிலும் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப் பொருட்கள் இல்லை எனவும் கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் தெரிவித்தனர்.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபையில் நேற்று இடம்பெற்ற கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் சந்திப்பின் போது இவ் விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டன,

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக நிவாரணப் பொருட்களை வழங்குவதிலேயே கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டு வந்தமையால் சங்கப்பணியாளர்களுக்கு வேதனம் வழங்க முடியாத நிலையில் இருப்பதாகவும், உணவு முத்திரைக்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்ய சங்கங்களிடம் நிதிவசதி போதாமல் இருப்பதாகவும், இதனால் அடுத்த ஆண்டு தை மாதம் முதல் கூட்டுறவுச் சங்கங்களை தற்காலிகமாக மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகி வருவதாகவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

நிவாரணப் பொருட்களை ஏற்றி இறக்குவதிலும் விநியோகம் செய்வதிலும் சங்க வாகனங்களுக்கு ஏற்பட்ட எரிபொருள் போன்ற செலவினங்களை இதுவரை செயலகம் வழங்கவில்லை எனவும் தற்போதுள்ள பண முடக்கத்தினால் அதிக விலை கொடுத்து எரிபொருள் வாங்க முடியாத நிலை இருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

சில கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி இல்லை என்றும் சில கடைகளில் மா இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பொருளுக்குப்பதிலாக இன்னொரு பொருளை வழங்கக் கூடாது என உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்திருப்பதனால் உரிய தொகைக்கான பொருட்களை விநியோகிக்க முடியாதிருப்பதாகவும் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர்.

பொருட்களாகக் குறைத்து வழங்கி பின்னர் மிகுதிப் பொருட்களை வழங்குவதில் பல சிக்கல்கள் ஏற்படும் என சில தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றவரவு செலவுத்திட்ட விவாதத்தில் இடம்பெற்றகூட்டுறவுத்துறை அமைச்சு ஒதுக்கீட்டு விவாதத்தின் போதும், வடபகுதி கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமைகள் குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (66)

கப்டன் சுந்தரியின் இறுதிச் சடங்கில் ராஜன் உரை:

# ஒரு போராளியின் இழப்பிலிருந்து - நாம் கற்க வேண்டியது எவ்வளவோ உள்ளது

''எமது உயிர் உன்னதமானது. அதிலும் மேலானது எமது சுதந்திரம் என்று எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கூறுவது போல், இந்த மண்ணுக்காக, இந்த மக்களுக்காக சுதந்திரம் வேண்டிப் போராடி வீரமரணம் அடைந்த கப்டன் சுந்தரியின் பொன்னுடல் இன்று தீயுடன் சங்கமமாகின்றது.''

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உப செயலாளரும், இராணுவப் பிரிவுப் பொறுப்பாளருமான கப்டன் சுந்தரியின் (உ. உதயலஷ்மி, வல்வெட்டித்துறை) இறுதிச் சடங்குகள் இமையாணன் வடக்கில் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள ''மாவீரர் துயிலும் இல்லத்தில்'' நடைபெற்ற பொழுது, யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசும்பொழுதுமேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

''கப்டன் சுந்தரியின் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். ஒரு குடும்பத்திலேயே மூன்று வேறுபட்ட தனித்துவத்தைக் கொண்ட மூன்று போராளிகளை இழந்துவிட்ட அன்னாரது குடும்பத்தில் இருந்து நாம் கற்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது- நாம் அழுது துயரம் தோய்ந்தவர்களாக எங்களை ஆக்கிக் கொள்ளக் கூடாது - அவரது இலட்சிய ஈடேற்றத்திற்கு ஒவ்வொருவரும் தமது பங்கை ஆற்ற முன்வர வேண்டும் எனவும் ராஜன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். (22)

### வீரமரணமடைந்த...

ராஜ்) மூத்தையன்கட்டு, கண்ணன் (சு.துரைராஜா) கிளிநொச்சி. லிங்கராஜ் (சு.கதிர்காமநாதன்) வவுனியா, விஜி (ம.நிகசன்) ஜெயந்திநகர், கோணேஸ் (சூ.ஜெயசீலன்) பாவற்குளம், நிர்மலன் செட்டிக்குளம், பிரவு

கப்டன் ரஜனி (ச. பரமேஸ்வரி) ஓமந்தை, கப்டன் டோறா (க. பத்மாவதி) கரவெட்டி, லெப். கோமகள் (சி. சித்திரா) கப்பூது, 2-வது லெப். சிறிஜா (சு ரட்ணாவதி) கரணவாய், 2 வது லெப். சுபோ (க. சுமதி) மட்டுவில், 2-வது லெப். இலக்கனா (பா.பிறேமினி) கல்வயல், 2-வது லெப். பொன்னி (செ.பிரமிளா) பொலிகண்டி, மரிஸ்டலா (பி.ஜெனோ)

### ஆயுதங்களின் விபரம் ..

காத அங்கிகள் - 15, குண்டு துளைக்காத கோல்சரி - 03.

17. 7. 62. நடுத்தர. ரவைகள் - 79,900
7. 62. நேட்டோ ரவைகள் - 10, 30 0
எல். 3 ரவை (விங்குடன்- 3, 800
(74,70)

லட்சுமி) தம்பசிட்டி, 2-வது லெப். மரியாச்சி (கு சிந்தனா) யாழ்ப்பாணம், தமிழ்ச்செல்வி (ச. சுமங்களா) அக்கரைப்பற்று, கோணேஸ் (சு பேபி சசிகலா) உருத்திரபுரம். டயானா (த. கவிதா) அளம்பில், விக்ரோரியா (அ புஸ்ப சிறீயாணி) ஊறணி, சுதா (லெ சுதர்மினி)

### இந்திய...

நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளா முன்னர் இம்மாதம் இலங்கை வர இருந்த போதிலும் சீனப்பிரதமரின் கொழும்பு விஜயத்தை அடுத்து அவரின் விஜயம் பின்போடப்பட்டது.

### றோகண ...

தலைவருக்கு ஒரு வீடு வாங்குவதாக முடிவு செய்யப்பட்டு 40 ஆயிரம் ரூபா கையளிக்கப்பட்டதாம்.

### படுவான்கரையில்...

நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கை ஒப்பரேஷன் 'பிளஷ் அவுட்' (Flush out முற்றாக நீக்கல்) என்ற இராணுவக் குறியீட்டுப்பெயரில் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கண்ணிவெடியில் பலியான திருமலை இராணுவப் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் விஜேரட்னவுக்கு பதிலாக பிரிகேடியர் பரனகம திருமலையின் புதிய இராணுவப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### யாழ்...

இராணுவத்தை வெற்றிகொண்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம், அரசின் கட்டுப்பாடு எனச் சொல்கிறீர்கள் ஏன் அங்கே மின்சாரம் வழங்கவில்லை

வடபகுதியில்

# புதிய கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்கள் கோரல்

வடபகுதியில் உள்ள கல்விப்பணிமனை ஒன்றிற்கு பிராந்திய கல்விப்பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்

இதன்படி இலங்கை கல்வி நிர்வாகச் சேவையில் வகுப்பு II இல் உள்ளவர்களை இதற்காக மனுச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒவ்வொரு கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ப 17)

### காடுகளில்

நோய் முதலியவற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழப்புக்கு உள்ளானார்கள். இவர்களுள் 165 குழந்தைகள் உட்பட 291 பேர் அடங்குவர்.

காடுகளில் இவர்கள் தற்காலமாக அமைத்த குடிசைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. போஷாக்கு இன்மையால் வாடியதால் வயிற்றோட்டம், மலேரியா முதலிய நோய்கள் இவர்களைப் பெரிதும் பாதித்தன.

இவர்களுக்கு அரசிடமிருந்தோ, தனியார் தொண்டர் நிறுவனங்களிலிருந்தோ எவ்விதஉதவியோ ஆதரவோ கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (71)

### யாழ் அரச...

தும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் முக்கிய விடயங்கள் பற்றியும் அவர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்துவார். (66)

### வீரவேங்கை...

படுத்தியது தெரிந்ததே.

இதே வேளை மாங்குள இராணுவ முகாம் வெற்றி விழாவை வன்னிப்பகுதியில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. 70

### மாங்குளம் ..

அனைத்து தமிழீழ மக்களும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர். (71, 41)


## கம்பியூட்டர் கல்வி

★ DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE.

ஆரம்பம்:- 22 Dec. 1990, 1-30 p. m.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
24 Dec. 1990 1-30 p. m.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்.

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

UNIKCO COMPUTER CENTRE
No, 37, Clock Tower Road,
JAFFNA,
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

11146


## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 13 —



வீர[illegible] மரணம்: 22 —

2-வது லெப். சிரிஜா (சு. ரட்ணாவதி) கரணவாய், 2 வது லெப். சுபோ (க. சுமதி) மட்டுவில், 2-வது லெப். இலக்கனா (பா.பிறேமினி) கல்வயல், 2-வது லெப். பொன்னி (செ.பிரமிளா) பொலிகண்டி, மரிஸ்டலா (பி.ஜெனோ) வெற்றிலைக்கேணி, பெனாசிர் (சி. ஜமுனா) அளம்பில், 2-வது லெப். வைதேகி (சி. சீதா

(கு சிந்தனா) யாழ்ப்பாணம், தமிழ்ச்செல்வி (ச. சுமங்களா) அக்கரைப்பற்று, கோணேஸ் (சு பேபி சசிகலா) உருத்திரபுரம். டயானா (த. கவிதா) அளம்பில், விக்ரோறியா (அ புஸ்ப சிறீயானி) ஊறணி, சுதா (லெ சுதர்மினி) மாமுலைரசிக்கா (ச. யாழினி) அரியாலை.

(70,74)

கொண்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம், அரசின் கட்டுப்பாடு எனச் சொல்கிறீர்கள் ஏன் அங்கே மின்சாரம் வழங்க வில்லை இவ்வாறு அவர் சொன்னார்.

(38)


## க. பொ. த. உயர்தரம்

## விஞ்ஞானப் பிரிவு

## 90, 91, 92

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

### 23.12.90 ஞாயிறு பிற்பகல் 2 மணி

| | |
|---|---|
| பௌதிகவியல்: | திரு. நந்தகுமார் |
| இரசாயனவியல்: | திரு. செல்வா |
| தூய, பிரயோக கணிதம்: | திரு. சந்திரமோகன் |
| விலங்கியல்: | திரு. நாகநாதன் |
| தாவரவியல்: | திரு. ஐங்கரநேசன் |

## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

12135


## காலமானார்

### செல்லையா குமாரலிங்கம்

(Rtd, Postmaster)

திரு. செல்லையா குமாரலிங்கம் (Rtd, Postmaster) காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையா (Teacher), பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் இதயகுமார் (Germany), ரஞ்ஜகுமார் (Lecturer Dept. of Economics, Un!versity of Jaffna), பிரேமகுமார் (Paris Travels (Pvt ) Ltd - Colombo), சுபித்தா, யசோதா, ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குமாரசுவாமி (Rtd. A- G. A.) குமாரசிவம், (C. T B.), செல்வமணி செல்லையா (Teacher Nunavil G, T. M. S.) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அருளையா அருளம்பலம் (Malayan Pensioneer - நீர்வேலி) ஆகியோரின் மருமகனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-12-90 திங்கட்கிழமை பி. ப. 2-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி,

கு. ரஞ்ஜகுமார்

12145

13 — 09 — 1971



22 — 11 — 1990

## "வீரவேங்கை கோமகள்"

### செல்வி சித்ரா சிவானந்தம்

(ஆரையம்பதி-மட்டக்களப்பு)

22.11.1990 அன்று மாங்குள முகாம் தாக்குதலில் வீர மரணமடைந்தார். இவர் திரு. திருமதி சிவானந்தனின் ஏக புதல்வியும், செல்வி குணரெட்ணம் நளினா (டாக்டர்-திருச்சிலுவை சுகநல நிலையம் பாசையூர்) உஷாதேவி, கலாதேவி, உதயகுமாரன் ஆகியோரின் அருமை மச்சாளுமாவார்.

தகவல்:

திருச்சிலுவை சுகநல நிலையம், பாசையூர்.

கு. நளினா.

12151


இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்" இல் உள்ள அச்சகத்தில் 22-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.